# கலைஞரும் நானும்

90

“திராவிட இயக்கம்தான் என் தலைமுறையைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோருக்கு ஜனநாயக, பகுத்தறிவு, சாதி எதிர்ப்பு விழுமியங்களை முதன்முதலில் கற்றுத் தந்தது; தமிழுணர்வையும் சுயமரியாதை உணர்வையும் ஊட்டியது. அந்த உணர்வை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் போர்வாளாக இருந்தவர் கலைஞர்”, என தனது நினைவுகளைப் பகிர்கிறார் ஆய்வாளர் எஸ்.வி.ராஜதுரை.

படம் : யோகா



# கருத்துக்காக களத்தில் நின்ற ஆளுமை!

எஸ்.வி.ராஜதுரை, ஆய்வாளர்

எனது பள்ளிப் பருவத்தில் இருந்தே தி.மு.க மீதும் பெரியார் மீதும் ஈர்ப்புக் கொண்டிருந்த என்னை எனது உறவினர்களும் என் குடும்பத்திற்கு நெருக்கமான காங்கிரஸ்காரர்களும் திட்டுவார்கள். எங்கள் ஊரான தாராபுரம், திராவிடர் கழக, தி.மு.க அனுதாபிகள் கொண்ட ஊராக இருந்தது.

நான், கழகத்தோடு தொடர்பில் இருந்ததால், கழக ஏடுகள், அண்ணா, கலைவாணர், எஸ்.எஸ்.ஆர், கலைஞர் படங்களைப் பார்ப்பதும் தொடர்ந்தது. திராவிட இயக்கச் சொற்பொழிவாளர்களின் பேச்சுகள், கூட்டங்களுக்கு மூத்த வர்களுடன் செல்வது வழக்கமானது. ‘பராசக்தி’ திரைப்படத்தின் கதை வசனப் புத்தகம் வாங்கி, மனப்பாடமாகச் சொல்வது, ஈரோட்டிற்குச் சென்று ‘பராசக்தி’ படம் பார்த்த நினைவு உள்ளது. அப்படித்தான் முதன்முதலில் கலைஞர் அறிமுகமானார்.



எங்கள் ஊரில், தி.மு.க. சார்பில் பொதுக் கூட்டங்கள் அடிக்கடி நடைபெறும். 1959-ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட எல்லாப் பொதுக்கூட்டங்களுக்குமான அறிவிப்புத் தட்டிகளை நானே எழுதுவேன்.அப்படியான சூழலில் 1958-ஆம் ஆண்டில் கோபிச்செட்டி பாளையத்தில் நடந்த கோவை மாவட்ட தி.மு.க. மாநாட்டில்தான் கலைஞர் அவர்களின் உரையை நான் முதன்முதலில் கேட்டேன்.

1959-ஆம் ஆண்டு எனக்கு நீலகிரி மாவட்டத்தில், அரசு வேலை கிடைத்து, அங்கு சென்றபோது, அங்கும் தி.மு.கழகத்தின ரோடு தொடர்பு உருவாக்கிக் கொண்டு இயங்கினேன். 1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட தால், வேறு காரணங்கள் காட்டி பணியிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்டேன். 1967-ஆம் ஆண்டு தேர்தலில் உடுமலை நாராயணனுக்காக தேர்தல் பணிகள் செய்தேன். எங்கள் வீடே தேர்தல் பணிமனையாக இருந்தது. அதே காலகட்டத்தில் எனது அரசியல் பார்வை, தீவிர இடதுசாரிகள் பக்கம் வளர்ந்து கொண்டிருந்தது. 1970-ஆம் ஆண்டு கடைசி வரை அது நீடித்தது. மீண்டும் 1971-ஆம் ஆண்டும் அரசுப் பணியில் சேர்ந்தபோதுதான், 1972-ஆம் ஆண்டில் உதகையில் பெரியார் கலந்து கொண்ட கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றி இருக்கிறேன்.

1980-ஆம் ஆண்டு வாக்கில், இனி அரசியல் ஏதும் வேண்டாம், இலக்கியத் துறையில் பணியாற்றலாம் என்ற முடிவோடு சென்னை வாழ்க்கையைத் தொடங்கினேன். அப்போதுதான் ஈழப் பிரச்சினையும் தீவிரமடைந்தது. ‘ஈழத் தமிழர் பாதுகாப்புக் கூட்டமைப்பு’ என்னும் அமைப்பு சென்னையில் தொடங்கப் பட்டது. சுப.வீரபாண்டியன், அருள்மொழி (அப்போது அவர் சட்டக்கல்லூரி மாணவர்), இன்குலாப் உள்ளிட்டோருடன் நானும் சேர்ந்து பணியாற்றிய அந்த அமைப்பு, தமிழ்நாட்டில் முதன்முறையாக 1987-ஆம் ஆண்டு இறுதியில் ‘மனிதச் சங்கிலி’ப் போராட்டத்தை நடத்த முடிவு செய்தது.

அந்த எண்ணத்துடன் அன்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞரை அணுகிய போது, அதற்கு முழு ஆதரவு அளித்ததுடன், ‘அறிவாலயத்தின்’ வாயிலருகே அந்த மனிதச் சங்கிலியில் ஆற்காடு வீராசாமி போன்ற தலைவர்களுடன் இணைந்து கைகோத்து, ஒரு மணி நேரத்துக்கு மேல் நின்றார்.

## தி.மு.க. விமர்சனம்

1990-கள் தொடங்கி நான் தனியாகவும் வ.கீதாவுடன் இணைந்தும் கலைஞரையும் தி.மு.க.வையும் கடுமையாக விமர்சித்தும், அதே வேளை ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பிரிவினரின் முன்னேற்றத்துக்கு, அவர் வழங்கிய ஆக்கபூர்வமான பங்களிப்புகளைச் சுட்டிக்காட்டி, ஆங்கிலத்திலும் தமிழிலும் பல கட்டுரைகள் எழுதி வந்தோம்.

1991-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவும் காங்கிரஸும் இணைந்து, ராஜீவ் காந்தி படுகொலைக்கு தி.மு.க. காரணமாக இருந்ததாக அவதூறுப் பிரச்சாரம் செய்து, அக்கட்சி பெரும் தோல்வியைச் சந்திக்கச் செய்த பிறகு, நாங்கள் தி.மு.க.வின் ஆக்கபூர்வமான வரலாற்றுப் பாத்திரத்தை எடுத்துக்காட்டி ‘எகனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி’யின் 19.6.1991 இதழில் எழுதிய ‘Dravidian Politics: End of An Era’ என்னும் ஆங்கிலக் கட்டுரையை ‘முரசொலி’யில் தமிழாக்கம் செய்து வெளியிடச் செய்தார் கலைஞர்.

1993-இல் அவருக்கும் வைகோவுக்கும் ஏற்பட்ட அரசியல் மோதல்களை விமர்சித்து, நாங்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரையைப் படித்த கலைஞர், அந்தக் கட்டுரை சரியான புரிதலின் அடிப்படையில் எழுதப்பட்டதல்ல என்று என்னிடம் கூறுமாறு, அவரது நம்பிக்கைக்குரியவராக இருந்தவரும் எனது நண்பருமான முனைவர் மு.நாகநாதனிடம் கூறியிருக்கிறார்.

**‘மரண தண்டனை’ என்ற முறையே ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்னும் உறுதியான கருத்தைப் பகிரங்கமாக அறிவித்த ஒரே மாநில முதலமைச்சராகத் திகழ்ந்தார் கலைஞர்.**

ஆனால், 1996-இல் நானும் வ.கீதாவும் எழுதிய ‘பெரியார் : சுயமரியாதை சமதர்மம்’ நூலைப் படித்துவிட்டு, ஒரு நாள் காலை மு.நாகநாதனிடம் ‘‘உங்கள் நண்பர் எஸ்.வி.ராஜதுரை நன்றாக எழுதியுள்ளார்; வ.கீதா பார்ப்பனப் பெண்ணாக இருந்தாலும் நன்றாக எழுதியுள்ளார் என்று சொல்லுங்கள்” என்று பாராட்டும் தெரிவித்திருக்கிறார்

## மரணதண்டனை கூடாது

ராஜீவ் காந்தி கொலை வழக்கில், மரண தண்டனை வழங்கப்பட்ட நால்வருக்கு அந்த தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்னும் கோரிக்கையுடன், 1999-இல் நீதி நாயகம் வீ.ஆர்.கிருஷ்ண ஐயர் தலைமையில், என்னை அனைத்திந்திய ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ‘மரண தண்டனை ஒழிப்பு இயக்கம்’ சென்னையில் தொடங்கப்பட்டது.

அந்த அமைப்பின் சார்பில், கலைஞரிடம் கருணை மனுக்களை அளித்தாலும், வல்லமை மிக்க இந்திய அரசைப் பொறுத்தவரை ராஜீவ் காந்தி படுகொலை, அதற்கு விடுக்கப்பட்ட பெரும் சவால். எனவே, இந்திய அரசு இயந்திரம் இயங்கும் விதத்தை நன்கு புரிந்து கொண்டிருந்த கலைஞரால் வேறு எதையும் செய்ய முடியவில்லை; செய்திருக்கவும் முடியாது. ஆனால், ‘மரண தண்டனை’ என்ற முறையே ஒழித்துக் கட்டப்பட வேண்டும் என்னும் உறுதியான கருத்தைப் பகிரங்கமாக அறிவித்த ஒரே மாநில முதலமைச்சராகத் திகழ்ந்தார் கலைஞர்.

## கைது கண்டனம்

2001-இல் கலைஞரை நள்ளிரவில் கைது செய்ததைக் கண்டித்து, முதல் அறிக்கையை வெளியிட்டது நான், இன்குலாப், சுப.வீரபாண்டியன், வைரமுத்து ஆகியோர்தாம். கலைஞரின் கைது பற்றி காலஞ்சென்ற நீதிநாயகம் வீ.ஆர்.கிருஷ்ண ஐயரிடம் விரிவாகத் தொலைபேசியில் கூறி, அது தொடர்பான நீண்ட கண்டன அறிக்கையை அவரிடமிருந்து வாங்கினோம். ‘தி ஹிந்து’ ஆங்கில நாளேட்டில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையை, தமிழாக்கம் செய்து பல ஏடுகளுக்குத் தந்து உதவினேன்.

சென்னை மெரினா கடற்கரையிலுள்ள கண்ணகி சிலை ஜெயலலிதாவின் அகம்பாவத்தால் அகற்றப்பட்டபோது, அது மீண்டும் அதே இடத்தில் நிலைநாட்டப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான முயற்சியாக ‘அறிவாலய’த்தில் 22.12.2001 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு, தாமே கையொப்பமிட்டு அந்தக் கடிதத்தை காலஞ்சென்ற சட்டமன்ற உறுப்பினர் சா.கணேசனிடம் கொடுத்து, என்னிடம் நேரடியாகக் கொடுக்கும்படி அறிவுறுத்தியிருந்தார் கலைஞர்.

அந்தக் கடிதத்தைப் படித்துத் திகைத்துப் போன நான், இன்குலாபையும் சுப. வீரபாண்டியனையும் உடனடியாகத் தொடர்பு கொண்டபோது, அவர்களும் இதே போன்ற கடிதம் தங்களுக்கும் வந்திருப்பதாகக் கூறினார்கள். அடுத்த நாள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், சீரணி அரங்கத்தில் நடைபெற்ற மாநாட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றினேன்.

2007-ஆம் ஆண்டு ஜனவரியில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், பெரியார் உயராய்வு மையத்தின் தலைவராகவும் பேராசிரியராகவும் இரண்டாண்டு காலத்துக்கு என்னை நியமித்திருந்தது. அந்த மையம் கலைஞரின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பட்டிருந்ததால், மரியாதை நிமித்தமாக கலைஞரைச் சந்தித்தேன். என் கைகளை இறுகப் பற்றிக் கொண்டு தம் அருகில் உட்கார வைத்த கலைஞர், பெரியார் உயராய்வு மையத்தின் பொறுப்பை நான் எடுத்துக் கொள்வதற்கு வாழ்த்துத் தெரிவித்தார். அப்போது, மிக ஆர்வமாக பொது நூலகங்கள் செயல்படுவது பற்றியும் ஆயிரம் பிரதிகள் வரை ஒரு புத்தகத்தை வாங்க வழி செய்யும் ஆணையைத் தமது அரசாங்கம் பிறப்பித்துள்ளதைப் பற்றியும் பேசினார். எனக்கும் நெகிழ்வாக அந்தச் சம்பவம் அமைந்தது.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## தாய்மொழிகளைக் காக்கும் தமிழ்!

மகாராஷ்டிரா மாநிலத்தில், விரைவில் சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மராத்திய மொழிக்குச் செம்மொழித் தகுதி வழங்க, இந்திய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மராத்தியுடன் வங்காளம், அசாமி, பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளும் இந்திய ஒன்றிய அரசினால் செம்மொழித் தகுதியைப் பெறவிருக்கின்றன. இந்தியாவில் மொழி அரசியலும் மொழி ஆதிக்கமும் அதிகாரத்துடன் நெருக்கமான தொடர்புடையவை. அத்தகைய அதிகார பீடங்களைத் தகர்த்து, அவரவர் மொழிகளைக் காத்திடும் படைக்கலனாக இருப்பது, நம் தாய்மொழியான தமிழேயாகும்.

பழமையானதும், தனித்து இயங்கும் தன்மை கொண்டதும், பண்பாட்டு விழுமியங்கள் கொண்டதும், இலக்கிய-இலக்கண வளமை மிகுந்ததும், காலங்கடந்து நிற்கக்கூடிய ஆற்றலும் கொண்ட மொழிகளே, செம்மொழிகள் என்ற தகுதியைப் பெறுகின்றன. இத்தன்மைகளைக் கொண்ட தமிழ் மொழிக்கான செம்மொழித் தகுதியை தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் தொடங்கி, பலரும் வலியுறுத்தி வந்தனர்.

இந்திய ஒன்றிய அரசின் ஒப்புதலைப் பெற்று செம்மொழியாக அறிவிக்கப்படுவதற்கு ஒரு நூற்றாண்டு காலம் பல்வேறு கோரிக்கைகள், முறையீடுகள், போராட்டங்கள் நடைபெற்று முத்தமிழறிஞர் கலைஞரின் பெருமுயற்சியால், 2004-ஆம் ஆண்டு, தமிழுக்கு செம்மொழித் தகுதியை அளித்து சிறப்பித்தது. இந்திய ஒன்றிய அரசு. செம்மொழித் தகுதி பெற்ற முதல் மொழி, தமிழ்தான். தரவுகளை மேற்கொண்டு தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒடியா ஆகிய மொழிகள் செம்மொழித் தகுதியினைப் பெற்றன. இதில் சமஸ்கிருதம் என்பது பேச்சு மொழியாக இல்லை. மாநில மொழியாகவும் இல்லை. 138 கோடி மக்கள் வாழும் நாட்டில் 25ஆயிரத்துக்கும் குறைவானவர்களே சமஸ்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர்.

ஆதிக்க மொழியை எதிர்த்து நின்று, தாய்மொழியைக் காப்பதற்கு தமிழ்நாடு முதன்மையாக இருந்து எப்படி பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியதோ, அதே முறையில் செம்மொழித் தகுதியை இந்தியாவின் பிற மொழிகள் பெறுவதற்கும், அந்த மொழிகளின் வளர்ச்சிக்கும் துணை நிற்கிறது, நம் தாய்மொழித் தமிழ்.

-பத்திரிகையாளர் கோவி.லெனின் பதிவிலிருந்து

## ஃப்ளாஷ்பேக்

### சான்றிதழுடன் தலைவரைக் கண்டோம்!



1998-ஆம் ஆண்டு திருவாரூருக்கு, மறைந்த பூண்டி.கே.கலைச்செல்வன் அவர்கள் முதல்முறையாக மாவட்டக் கழகச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து, வெற்றிச் சான்றிதழுடன், மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் வாழ்த்துப் பெற அண்ணா அறிவாலயம் சென்றோம். அப்போது எங்களைப் பாராட்டிச் சிறப்புடன் பணியாற்ற வாழ்த்துகளைத் தெரிவித்தார், தலைவர் கலைஞர். உடன் கழக நிர்வாகிகள் பாலஞானவேல், க.தன்ராஜ், முகில் ராஜேந்திரன், மறைந்த கப்பத்தா ஆகியோர் உள்ளனர்.



ஆர்.வி.எல். ரவிச்சந்திரன்

**– ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், மாவட்டப் பொறியாளர் அணித் தலைவர், திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### பேரறிஞர் அண்ணாவின் ஆற்றல்!

1934-ஆம் ஆண்டு பி.ஏ. (ஹானர்ஸ்) படித்து, எம்.ஏ. (பொருளாதாரம் மற்றும் அரசியல்) பட்டம் பெற்றார் பேரறிஞர் அண்ணா. கல்லூரி நாட்களில் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்தார். சென்னை, தங்க சாலையில் இருந்த பண்டிட் ஆனந்தம் நூலகம், செயின்ட் சேவியர் தெருவில் இருந்த மாநகராட்சி நூலகம், கன்னிமரா நூலகம் ஆகியவற்றில் அவர் படிக்காத நூல்களே இல்லை என்று கூறப்படுவதுண்டு. அண்ணாவின் ஹானர்ஸ் படிப்புக்கு பச்சையப்பன் கல்லூரித் தலைவர் சின்னத்தம்பி உறுதுணையாக இருந்தார்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

621

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131